உ
சிவமயம்
கணபதி துணை
முருகன் துணை



சவ்வாதுப் புலவர்

இயற்றிய

கொடுமளூர்
குமரகுருபர முருகன் பதிகம்

1957

உ
சிவமயம்
கணபதி துணை
முருகன் துணை

சவ்வாதுப் புலவர்
இயற்றிய

கொடுமளூர்
குமரகுருபர முருகன் பதிகம்

இஃது
தேவகோட்டை
தி. ராம. தி. சு.
திண்ணப்ப செட்டியாரால்
வெளியிடப் பெற்றது

1957

உ
சிவமயம்

முன்னுரை

பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு உருவத் திருமேனி கொண்டு இந்நிலவுலகத்தில் எழுந்தருளியிருந்து அருள் புரிகின்ற திருத்தலங்கள் பலவாகும். மெய்யன்பர்களின் விருப்பத்திற்கேற்ப ஐம்முகம் கொண்ட சிவபெருமானே அறுமுகம் கொண்ட முருகப் பெருமானுகவும் காட்சிதந்து அனுக்கிரகம் செய்வாரென்று ஞான நூல்கள் கூறுகின்றன.

கலியுக வரதராகிய முருகப்பெருமான் வள்ளியம்மையாரைத் திருமணம் புரிந்து கொள்ளுதற்கு வேட வடிவங் கொண்டே இந்நிலவுலகத்திற்கு வந்தாரென்று கந்தபுராணம் முதலிய நூல்களால் அறிகின்ருேம். இவ்வரலாற்றுக் காட்சியை இன்று நாம் நேரே கண்டு மகிழுதற்கேற்ற வாய்ப்புடையதாக அமைந்திருப்பது கொடுமளூர்த் திருத்தலம்.

இத்தலத்தில் முருகப்பெருமான் உடைவேல் மரத்தினடியில் வேட வடிவத்துடனிருந்து காட்சி தந்து மெய்யன்பர்கள் வேண்டிய வேண்டியாங்

கீந்து விளங்கிக்கொண்டிருக்கின்ருர். இத்திருத் தலம் மாஞமதுரை—கமுதி கற்சாலேயில் பார்த்திப ஞூருக்குத் தெற்கே விரதக்குளத்திற்கு அருகில் கற்சாலேயிலிருந்து கிழக்கே அரைக்கல் தொலேவில் இருக்கிறது. கற்சாலேயில் "மேலக் கொடுமளூர்" என்று கைகாட்டி உண்டு.

சேது சமஸ்தான வித்துவாஞயிருந்த சவ்வாதுப்புலவர் கொடுமளூர்த் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற முருகப்பெருமான் மீது பாடிய இத்திருப்பதிகம் 1896-ல் எங்கள் முன்ஞேர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. பிரார்த்தனேத் தலமாக விளங்குகின்ற கொடுமளூருக்குரிய இப்பதிகத்தின் பிரதிகள் அனேவரிடமும் இருக்க வேண்டுவது இன்றியமையாதது என்று கருதி, இன்று எனது சகோதரர் திரு. பழநியப்ப செட்டியாரின் அறுபதாவது ஆண்டு நிறைவு ஞாபகார்த்தமாக இதனே மீண்டும் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்ருேம். சைவ மெய்யன்பர்கள் ஏற்றுப் பயன் பெறுவார்களாக.

அன்புள்ள,

தேவகோட்டை,
ஏவிளம்பி-ஆடி-19.

தி. ராம. தி. சு.
திண்ணப்ப செட்டியார்
சுந்தரேசப் பிரபு வீடு.

உ

கணபதி துணை



முருகன் துணை

கொடுமளூர்

குமரகுருபர முருகன் பதிகம்

பூமேவு சண்முக விலாசமும் மீராறு
புருவமுங் கிரீடமுடியும்

பொட்டுநுத லுங்கனக குண்டலமு மருண்மாரி
பொழியுமீ ராறுவிழியும்

மாமேவு செம்பவள வாய்மந்த காசமும்
மாலையணி யுங்கழுத்தும்

வாகுகே யூரமுமி ராறுபுய முங்கையும்
வடிவேலு மபயகரமும்

தாமேவு மெக்ஞோப வீதமணி மார்பமுஞ்
சாத்துதிரு வுத்தரியமும்

தாமரைப் பாதமுந் தமியனேன் காணப்ர
சன்னமாய்க் காட்சிதருவாய்

கோமேவு மிந்திரன் முதலமரர் தொழவவுணர்
கோனுயிர் குடித்ததளவாய்

கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே. (க)

வளந்தரு திருப்பரங் குன்றுதிரு வேரகம்
வயலூர் திருக்குடந்தை
மாயூர கிரிகுன்று தோருடல் சோலைமலை
வளர்சுப்ர மணியபேரூர்
களந்தையரு ணசலம் விராலிமலை தோகைமலை
கதிர்காமம் வையாபுரி
கங்கைநதி பாய்பழநி செந்தூர் திருத்தணிகை
கல்லூர் விருபாட்சிசீர்
அளந்திடுங் காவளூர் வேங்கடஞ் செங்குள
மமைந்தபே ரூராதியா
மற்புதத் தலமேவு நாயகா தற்சமய
மன்புவைத் தெனையாளுவாய்
குளந்தரு கணுனுக்கு மெஞ்ஞான தேசிகா
கூவிடுங் காலாயுதா
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே. (உ)

சரவண பவாகனக மயில்வாக ணுவசுர
சங்கார கோலாகலா

தகரேறு காங்கயா பரமகுரு நாயகா
சண்முகா கார்த்திகேயா

அரவணை முராரிமரு காகோடி சூர்யப்ர
காசவருள் வாசாலகா

யானைமுக னுக்கிளைய வேலாயு தாதெய்வ
யானைபுணர் சுப்ரமணியா

பிரணவச டாட்சர மகாமந்த்ர தந்திர
ப்ரதாபா குறத்திகணவா

பெண்ணரசி கன்னிதிரு சூலிநெடு நீலியுமை
பெற்றபுத் திரவிசாகா

குரவணையு நின்பாத சேவைதந் தென்னையாட்
கொள்ளுகதிர் காமநாதா

கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே. (௩)

சந்தன விருட்சமுங் கற்பக விருட்சமுந்
தங்கப்ர காசமான
சந்தான தாருவும் மந்தார முந்தெய்வ
தாருவும் பாரிசாத
சுந்தர விருட்சமுஞ் சண்பக விருட்சமுஞ்
சோதியுஞ் சாம்ப்ராணியும்
சூதமர மும்பலா வாழைமர முங்கனி
துலங்குவட வாலெனச்சொல்
பைந்தரு விருட்சமுங் குங்கும விருட்சமும்
பார்த்திப விருட்சவகையும்
பாதிரி விருட்சமும் மொட்டுடை விருட்சமாப்
பாரிற்ப்ர சித்தியாகிக்
கொந்தமர் விருட்சநிழல் வந்துவிளை யாடுனது
கோலத்தை யென்னசொல்வேன்
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே. (௬)

நக்கனரு ளால்வந்து மனவேக ரதமேறி
நால்வாய் முகத்தாருகன்
நல்வச்ர வாகங்கி முகவனுட னேமேக
நாதனும் பானுகோபன்
எக்கலிடு மூவாயி ரம்புதல்வர் மந்திரிக
ளேழா யிரத்துநால்வர்
எதிரேறு சிங்கமுக னதிசூர னசுரேந்
திரன்படைத் தலைவர்முதலோர்
திக்கதல மிக்கவரு வசுரரொடு சூரைச்
செயித்துநட மாடுமயின்மேல்
தேவர்சிறை மீட்கவே யேறிவரு நின்மகிமை
செப்புதற் கெளிதாகுமோ
குக்குடவி நோதனே யாறுமுக கம்பீர
கோதண்ட பாணிமருகா
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே. (ரு)

ஆடாது சித்துவிளை யாடலாந் திக்குவிச
யஞ்செய்து வெற்றிபெறலாம்
ஆசுகவி மதுரகவி சித்ரவித் தாரகவி
யானந்த மாய்ப்பாடலாம்
ஈடாரு மில்லாத தேவரை யழைத்துட
னிரும்பையும் பொன்னுக்கலாம்
இந்த்ரசா லத்துடன் மயேந்த்ரசா லங்கள்செய்
தெங்கும்ப்ர சித்திபெறலாம்
தாடாவு மிருகத்தின் வாய்கட்டி வேட்டையின்
தந்த்ரங்க ளும்புரியலாம்
தாழாத விவையெலா மய்யநின் னருள்பெறுந்
தன்மைக்கு நிகராகுமோ
கோடானு கோடிமனு வந்தடி பணிந்திடுங்
கோதகல் சுயம்பிரகாசா
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே. (சு)

சம்புவுக் குபதேசம் வைத்தாய தன்றியுஞ்
　　சம்பந்த மூர்த்தியாகிச்
சமணர்களை வெங்கழுவி லிட்டவா நித்தியத்
　　தத்துவப்ர காசமாக
நம்பினவ ரன்புகொண் டவரவர் நினைத்தவர
　　நல்கியே யாதரித்தாய்
நக்கீர தேவர்சிறை மீட்டாய் சிறைக்குளே
　　நான்முகத் தவனைவைத்தாய்
உம்பருக் குந்தயவு செய்தாய் குறத்திபா
　　லோங்குசெவ் வேங்கைமரமாய்
உற்றருளி னயருண கிரிநாதர் செந்தமி
　　ழுகந்தா யுளத்திருந்து
கும்பமுனி வன்றனக் கருள்செய்தாய் நின்மகிமை
　　கூறுதற் கெளிதாகுமோ
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
　　குமரகுரு பரமுருகனே. (எ)

சித்தமதி லுன்றிருப் பாதமே கெதியென்று
சிந்திக்கு மன்பருக்குச்
செல்வமுண் டாஞ்சகல கல்வியுண் டாம்புவன
தேசப்ர சித்தியுண்டாம்
நித்திய சரீரமுண் டாமிலக் குமிகருணை
நிலவுங் கடாட்சமுண்டாம்
நிகரில்பல லெட்சசது ரங்கபல முண்டாம்
நெடுஞ்சமரில் வெற்றியுண்டாம்
புத்ரசந் தானமுண் டாஞ்சகல பாக்கியப்
போகபோக் கியமுமுண்டாம்
புத்தியுண் டாநல்ல முத்தியுண் டாமுனது
புகழினை யுரைக்கலாமோ
கொத்தடிமை குடியடிமை யாமுழுது மென்னையாட்
கொண்டகதிர் காமவேலா
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே. (அ)

பாரமா யுன்பாத சேவைசெய்யு மன்பரைப்
பாவந் தொடர்ந்திடாது
பஞ்சகலி நாடாது கண்ணேறு நாவேறு
பஞ்சபா வந்தொடாது
சோரசா ரக்கிரியை சாமானி யப்பில்லி
துட்டமிரு கந்தொடாது
சொற்பனமு மாதாளி பண்ணுது பொறிவிடந்
தொடராது பூதமகலும்
கூரான வன்பிணிக ணேராது நின்மகிமை
கூறுதற் கெளிதாகுமோ
குக்குட விநோதனுஞ் சமரமுக கெம்பீர
கோலவடி வேலாயுதா
கோரரண வீரசெய நீரவடி யார்க்குதவு
குலதெய்வ மெஞ்ஞானமே
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே. (கூ)

கயிலாச நாதர்நித் தியகலி யாணிதங்
கருணை கடாட்சமுண்டாம்
கல்வாச நாட்டிளசை மேவுபெரு மருதூர்
கதிக்குநக ரப்ரதாபன்
செயலாளி திண்ணப்ப வணிகனரு ளால்வந்து
சென்மித்த வெள்ளையப்பன்
செம்மைசேர் தருராம நாதமதி யூகிதரு
செல்வவான் பழனியப்பன்
தயைமேவு சுப்ரமணி யாவென்று கூப்பிடச்
சந்தான பாக்யநல்கிச்
சத்தாங்க முங்கொடுத் தெத்தேச காலமுந்
தற்காத்த தெய்வநீயே
குயில்கூவு சோலைமலை செந்தூர் திருப்பரங்
குன்றிலுறை யுங்கடம்பா
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே. (ப)

வாழ்த்து.

அருவாயு முருவாயு மருவுருவ மாகிவிளை
யாடுமா தேவர்வாழி
அலையாழி யமுதங் கடைந்தமரர் துயர்தீர்த்த
வச்சுதா னந்தன்வாழி
கருவிலுரு வாய்வகுத் தகிலாண்ட கோடியுங்
கற்பித்த வேதன்வாழி
கண்ணுயி ரங்கொண்டு விண்ணோரை ரட்சித்த
கார்மேக வூர்திவாழி
மருவுமறை யவர்களொடு முப்பத்து முக்கோடி
வானவர்கள் முனிகள்வாழி
மன்னரொடு வணிகேசர் காராளர் முதலாக
வளர்சீவ செந்துவாழி
தருவனைய திண்ணப்ப வணிகனருள் ராமநா
தன்கிளை தழைத்து வாழி
தயவுபுரி கொடுமளூர்க் குமரகுரு பரமுருகர்
சன்னிதியும் வாழிதானே.

முற்றிற்று.

சௌத் இந்தியா பிரஸ்,
காரைக்குடி.